<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 326/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W.11 P.W.5 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கோபாலகிருஷ்ணன் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 18.02.2026.

<u>**முதல் விசாரணை**</u>

1. நான் தற்போது கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன் உடுமலைப்பேட்டை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது கடந்த 25.03.2025 ம் தேதியன்று பகல் 12.00 மணிக்கு நிலைய அலுவலில் இருந்த காவல் உதவி ஆய்வாளர் திரு கிருஷ்ணமூர்த்தி என்பவர் பதிவு செய்த குற்ற எண் 187/2025 ச/பி 331(4), 331(3), 305 BNS ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அவரது புலன் விசாரணையில் இருநத் வழக்கு கோப்பினை பாரி குற்றவாளி என்பதால் எதிரிகளை கண்டறியும் பழங்குற்றவாளிகளை தணிக்கை செய்யவும் எனது மேல் விசாரணைக்காக 10.04.2025 ம் தேதி நான் எடுத்து கொண்டேன். பின்னர் ஏற்கனவே விசாரித்து சாட்சிகள் சீனிவாச பிரபு, அபிநயா, ராம்குமார், கார்த்திக் குமார், கணேஷ், ஜெகநாதன் ஆகியோரை தனித்தனியாக விசாரித்த போது புதிய சங்கதிகள் எதும் கூறாததால் நான் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. அன்றைய

தினம் 10.04.2025 ஆம் தேதி சம்பவ இடங்களுக்கு சென்று விட்டு 11.45 மணியளவில் குற்றத்தடுப்பு நடவடிக்கையாக உடுமலைப்பேட்டை – தாராபுரம் ரோடு அய்யலு மீனாட்சி நகர் பிரிவு அருகில் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்த போது வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்த டிஎன் 38 BE 1609 என்ற என்னுள்ள பிளாட்டினா இருசக்கர வாகனத்தில் வந்தவரை காவல் குழுவினருடன் நிறுத்திய போது அந்த இருசக்கர வாகனத்தில் வந்தவர் தப்பிக்க முயற்சி செய்தவரை சுற்றி வளைத்து விசாரித்த போது மோட்டார் சைக்கிள் டேங்க் கவரில் இரும்பு ராடு ஒன்று இருந்ததால் தொடர்ந்து அவரை வெடித்து விசாரித்த போது அவர் தனது பெயரை திவான் என்கின்ற சுப்பிரமணியன், வயது 22, தகப்பனார் பெயர் நடராஜன், கீரநத்தம் கோயம்புத்தூர் மாவட்டத்தை சேர்ந்தவர் என்றும், தற்சமயம் இரண்டாவது வீதி அண்ணா நகர் செட்டிபாளையத்தில் குடியிருப்பதாகவும், தொடர்ந்து விசாரிக்கும் பொழுது அவர் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளித்ததால் அவரை தொடர் விசாரணையில் விசாரித்த போது அவர் உடுமலை தாராபுரம் ரோடு இந்திரா நகர், சேரன் நகர், மின்னகர், காந்திநகர், அதிஷ்டா கார்டன் ஆகிய பகுதிகளில் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் எவ்வித அச்சுறுத்தலும் இன்றி, துன்புறுத்தலும் இன்றி, ஆசை வார்த்தை இல்லாமலும் என்று தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுப்பதாக சொன்னதால் சாட்சிகள் கார்த்தி மற்றும் முகமது சபீர் ஆகிய முன்னிலையில் அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்த போது அவர் மேற்படி உடுமலை தாராபுரம் ரோடு இந்திரா நகர், சேரன் நகர், மின்னகர், காந்திநகர், அதிஷ்டா கார்டன் ஆகிய இடங்களில் உள்ள வீடுகளில் புகுந்துதிருடியதாக ஒப்புக் கொண்டதை அவரை அழைதது கோயம்புத்தூர் செட்டி பாளைத்தில் அவர்கள வாடகைக்கு குடியிருக்கும் வீட்டில் துணிகளுக்கு அடியில் மறைத்து வைத்திருந்த நகைகளை ஆஜர் செய்கிறேன் என்று கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து சாட்சி கையொப்பம் பெற்றும்எதிரியிடம் கையொப்பம் பெற்றும் நான் கையொப்பம் செய்தும் வாக்குமூலம் பதிவு செய்தேன். **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அசா.ஆ.8 என குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் அதே சாட்சிகளுடன் எதிரி சொன்ன செட்டிபாளையம் அண்ணா நகர் வீட்டிற்கு சென்ற போது எதிரி எடுத்து ஆஜர் செய்த நகைகளை ஆஜர் செய்தார் . இந்த வழக்கில் 1. சுமார் வெள்ளி கொலுசு 2 செட் 260 கிராம்., 2. குழந்தை வெள்ளி கொலுசு 2 செட்–

சுமார் 170 கிராம், 3. குங்கும சிமிழ் –1 30 கிராம், 4. வெள்ளி பவுல் 20 கிராம், 5. சந்தண கிண்ணம் –40 கிராம், 6. வெள்ளி ஸ்பூன் 15 கிராம் ஆகியவற்றை சேரன் நகர் பிரபு நகரில் உள்ள வாதியின் வீட்டில் திருடியதாக எடுத்து ஆஜர் செய்தார். அதனை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். அந்த வீட்டில் மேலும் திருடியதாக பணம் ரூ 5000/– ஐ சேவல் சண்டையல் சூதாடி செலவு செய்ததாக எதிரி கூறினார்.

2. பின்னர் வேறு இடங்களில் திருடிய சொத்துக்களை ஆஜர்படுத்தி அதற்குண்டான நகைகளை எதிரி எடுத்து ஆஜர் படுத்தியதை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றி பின்னர் நிலையம் கொண்டுவந்து எதிரியை சம்பந்தப்பட்ட வழக்குகளில் நீதிமன்ற காவலுக்காக பாரா காவல் வசம் ஒப்புவித்தேன் இந்த வழக்கில் ஒப்புதல் வாக்குமூலத்தின் அசல் ஆவணம் குற்ற எண் 182/2025 வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். இரும்பு ராடு மற்றும் பிளாட்டினா இரு சக்கர வாகனத்தையும் குற்ற எண் 182/2025 வழக்கில் ஆஜர் படுத்தியுள்ளேன். இந்த வழக்கில் ஒப்புதல் வாக்குமூலத்தின் உண்மை சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். பின்னர் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் முகமது சபிர் மற்றும் கார்த்தி என்பவர்களை விசாரித்தும் மற்றும் வழக்கின் வாதி சீனிவாச பிரபு என்பவரை விசாரித்தும் மறு வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கு சொத்துக்களை படிவம் 91 வழியாக கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **படிவம் 91 அசா.ஆ.9 என குறியீடு செய்யப்படுகிறது.** சாட்சிகளின் விசாரணையின் அடிப்படையில் களவு சொத்துக்களை இரவில் திருடி சென்றுள்ளதால் வழக்கின் சட்டப்பிரிவுகளை 331(4), 331(3), 305 BNS லிருந்து 331(4), 305(a) BNS மாறுதல் செய்து கனம் நீதிமன்றத்தற்கு அனுப்பி வைத்தேன். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அசா.ஆ .10 என குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. வழக்கின் படிவம் 91 ல் சாட்சிகளின் கையொப்பம் இடம் பெறவில்லை என்றால மகசரில் உள்ளதால் படிவம் 91 ல் சாட்சிகள் கையொப்பம் வராது. படிவம் 91 10.04.2025 ம் தேதி தயாரிக்கப்பட்டது 29.04.2025 ம் தேதி அனுப்பப்ப்பட்டுள்ளது என்றால் PR எண் கொடுத்து வழக்கு சொத்து ஒப்படைக்கப்பட்டது அந்த தேதியில். படிவம 91 ல் உள்ள வாசகம் யாரால் எழுதப்பட்டது என்றால் என்னுடைய ரைட்டரால் எழுதப்பட்டது. புகாரில் உள்ள

மொத்த களவு பொருள் கைப்பற்றப்படவில்லை என்றால் தங்க காயின் ஒன்று கைப்பற்றப்பட்டது. தங்க மோதிரத்தை பெரியப்பட்டி குளத்தில் வீசியதாக எதிரி கூறினார். முதல் தகவல் அறிக்கையில் ஜிடி என்ட்ரியில் காலம் 3சி நிரப்பப்படாமல் உள்ளது என்றால் சரிதான். புகார் 2 நாட்கள் காலதாமதமாக உள்ளது என்றால் 22 ம் இரவு பார்த்து விட்டு 23 ம் தேதி புகார் கொடுக்கப்ப்ட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அதிகாரியை விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை என்றால் அவர் முதல் புலன் விசாரணை அதிகாரி அதனால் விசாரிக்கவில்லை. முதல் புலன் விசாரணை அதிகாரி உங்களிடம் எப்போது வழக்கு கோப்பை ஒப்படைத்தார் என்றால் 10.04.2025 காலை 10.00 மணிககு. முதல் புலன் விசாரணை அதிகாரி ஒப்படைத்து அன்றே எதிரியை கைது செய்தததாக ஆவணத்தில் உள்ளது என்றால் சரியல்ல. வாகன தணிக்கையின போது உடன் இருந்த காவலர்களை சாட்சியாக போடவிலலை என்றால் சரிதான்.

2. எதிரி மீது வழக்குகள் அனைத்தும் வெவ்வேறு தேதிகளில் நடைபெற்றதாக உள்ளது என்றால் ஆமாம், தொடர்ந்து 3 மாதங்களில் வெவ்வேறு தேதியில் நடைபெற்றுள்ளது. ஜனவரி மாத காலகட்டத்தில் அதே காவல் நிலையத்தில் தான் காவல் ஆய்வாளராக இருந்தீர்கள் என்றால் ஆமாம். அந்த காலங்களில் உடுமலைப்பேட்டை காவல் நிலையத்தில் மொத்தம் எத்தனை காவலர்கள் என்றால் மொத்தம் 80 பேர் இருப்பார்கள். அயல் பணிகள் போக அலுவலத்தில் நாற்பது நபர்கள் காவல் நிலையத்தில் இருந்தார்கள். வெவ்வேறு காலங்களில் நடைபெற்றதாக சொல்லப்படும் அனைத்து வழக்குகளையும் ஒரே சார்பு ஆய்வாளர் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றால் ஆமாம் குற்றப்பிரிவு உதவி ஆய்வாளர் என்பதால் அவர்தான் பதிவு செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கை அனைத்தும் கம்ப்யூட்டர் மூலம் தட்டச்சு செய்யப்பட்ட ஆவணம என்றால் சரிதான். முதல் புலன் விசாரணை தட்டச்சு செய்யாத நிலையில் தட்டச்சு செய்த CCTNS அலுவலரை விசாரித்து வாக்குமூலம் பெற்றிர்களா என்றால் இல்லை.

3. ஒப்புதல் வாக்கு மூலம் பதிவு செய்ய எவ்வளவு நேரம் ஆனது என்றால் சுமார் 1.30 மணி நேரம். பொதுவாக ஒப்புதல் வாக்கு மூலமும் அனைத்து பகுதிகளிலும் தட்டச்சு செய்யப்பட்டவை என்றால்

ஆமாம். எங்கு வைத்து தட்டச்சு செய்யப்பட்டது என்றால் மடிக்கணினிகள். எப்படி செய்யப்பட்டது என்ற விபரம் ஒப்புதல் வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் மடிக்கணின் மேல் பதிவு செய்ததாக சொல்லப்பட்டுள்ளது. யார் பதிவு செய்தது என்றால் கம்ப்யூட்டர் ஆபரேட்டர் உள்ளார். எதிரியை கைது செய்வதாக சொல்லக்கூடிய இடத்திற்கு கம்ப்யூட்டர் ஆப்ரேட்டர் அழைத்துச் சென்றதாக வழக்கு கோப்பில் எங்கும் சொல்லவில்லை என்றால் ஆமாம்.

4. எதிரியை கைது செய்ததாக சொல்லப்படும் இடத்தில் வைத்து தட்டச்சு செய்வதற்கான வசதி இல்லை என்றால் சரியல்ல. முதல் முறை எதிரியை எத்தனை மணிக்கு பார்க்கிறீர்கள் என்றால் 10.04.2025 ம் தேதி 11.45 மணிக்கு . எதிரியை கைது செய்தததாக சொல்லப்படும் இடத்தில் கடைகள், வீடுகள், பொதுமக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதி என்றால் இரண்டு கடை உள்ளது பொதுமக்கள் குறைந்த அளவுதான் இருப்பார்கள். அந்த இடத்தில் கடை வைத்து இருப்பவர்களையோ ஜிம் உள்ளதாக சொல்லி உள்ள நிலையில் அங்குள்ள வீடுகளில் உள்ளவர்களை ஜிம்மின் உரிமையாளர்களையும் வழக்கில் சாட்சியாக போடவில்லை என்றால் அவர்கள் சாட்சியம் அளிக்க முன்வரவில்லை. அவ்வாறு சாட்சியம் அளிக்க முன் வராத நபர்கள் குறித்து வழக்கில் சொல்லவில்லை என்றால் ஆவணங்களில் சொல்லவில்லை.

5. எதிரியை கைது செய்வதாக சொல்லி உள்ள நிலையில் அந்த நேரத்தில் இருந்து ஒப்புதல் வாக்கு மூலம் தயாரிக்கப்பட்டு கைப்பற்றுதல் தயாரிக்கப்பட்டு அனைத்து வேலைகளையும் முடித்துவிட்டு அதற்கு பின்பு தான் காவல் நிலையம் வந்தீர்கள் என்றால் ஆமாம். அதற்கு இடைப்பட்ட நேரத்தில் காவல் நிலையத்திற்கு வரவில்லை என்றால் சரிதான். எதிரியை இறுதியாக காவல் நிலையத்திற்கு எப்போது எந்த தேதியில் அழைத்து வந்தீர்கள் என்றால் 10.04.2025 ம் தேதி மாலை 18.00 மணிக்கு.

6. எதிரியை கைது செய்ததாக சொல்லியுள்ள நிலையில் அந்த இடத்தில் தயாரிக்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தில் ஆரம்ப பகுதியில் குற்ற எண் அதன் சட்டப்பிரிவுகள் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால் நான் புலன் விசாரணை செய்து வருவதால் எனக்கு தெரியும் என்பதால் தட்டச்சு செய்த பட்டுள்ளது. அதற்கு பின்னிட்டு தான் எதிரில் ஒப்புதல் வாக்குமூலம் சொல்வதாக

வாசகங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது வழக்கமான முறை தான்.

7. எதிரியிடமிருந்து கைப்பற்றியதாக சொல்லி உள்ள பொருட்கள் நீங்கள் புகார்தாரர் வசம் காண்பித்து உறுதி செய்துவிட்டு கைப்பற்றவில்லை என்றால் அன்றைய தினமே புகாரிடம் அடையாளம் காட்டி மறு வாக்குமூலம் பெற்றுள்ளேன். மறு வாக்குமூலம் இப்பொழுது பெற்றீர்கள் என்றால் 18.00 மணிக்கு நிலையத்திற்கு வந்து புகார்தாரரிடம் காண்பித்து அடையாளம் காட்டி மறு வாக்குமூலம் பெறப்பட்டது.

8. கைப்பற்றுதல் மகஜரில் குற்ற எண் கட்டப்பட்டுள்ளது என்றால் ஆமாம். 10.04.2025 16.45 மணிக்கு தயாரிக்கப்பட்டதாக உள்ளது என்றால் ஆமாம். புகார்வாதிக்கு அடையாளம் காண்பிப்பதற்கு முன்பே குற்ற எண், சட்ட பிரிவுகள், பொருட்கள் இடம் பெற்றுள்ளது என்றால் சரிதான், அந்த வழக்கில் உள்ள சொத்துக்கு கைப்பற்றப்பட்டு பொருந்துவதாக உள்ளதால் காட்டப்பட்டுள்ளது.

9. கைப்பற்றுதல் மகஸர் கோயம்புத்தூர் செட்டிபாளையம் வைத்து எதிரி குடியிருந்ததாக சொல்லக்கூடிய வீட்டில் தயாரிக்கப்பட்ட ஆவணமாக உள்ளது என்றால் ஆமாம். அந்த ஆவணத்தில் தட்டச்சு செய்யப்பட்டதாக உள்ளது என்றால் ஆமாம், லேப்டாப்பில் செய்தோம். தட்டச்சு செய்யப்பட்டு எங்கு பிரின்ட் எடுக்கப்பட்டது என்றால் பென்டிரைவ் கொடுத்தேன், காவலர்கள் சென்று எடுத்து வந்தார்கள். இது போன்ற வசதிகள் இல்லாத பகுதி அந்த இடம் என்றாலும் வழக்கிற்ககா பொய்யாக சொல்கிறீர்கள் என்றாலும் சரி அல்ல.

10. உண்மையான குற்றவாளியை கண்டுபிடிக்காமலும், உள்ளூர் குற்றவாளியை காப்பாற்றும் நோக்கில் இந்த வழக்கில் எதிரியை பயன்படுத்தி இருக்கிறீர்கள் என்றால் இல்லை. நீங்கள் சொல்வது போல் சொன்ன தேதியை எதிரியை கைது செய்யவில்லை என்றாலும் கைது செய்வதாக சொல்லக்கூடிய 10.04.2025 ம் தேதிக்கு ஒரு வார காலத்திற்கு முன்பே சட்டத்திற்கு புறம்பாக நீங்கள் காவலில் எடுத்தீர்கள் என்றால் சரியல்ல.

11. ஒப்புதல் வாக்குமூலத்தில் 10.04.2025 ம் தேதி இரண்டு நாட்களுக்கு முன்பாக உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனையில் இரவு 11.00

மணிக்கு மேல் சிகிச்சைக்காக சேர்ந்ததாக உள்ளது என்றால் தலை சுற்றல் வந்ததால் சேர்ந்ததாக சொல்லப்பட்டுள்ளது. இரண்டு நாள் சிகிச்சைக்கு பின்னிட்டு பத்து 10.04.2025 ம் தேதி தான் டிஸ்சார்ஜ் செய்யப்பட்டதாக உள்ளது என்றால் சிகிச்சை முடித்து மாத்திரை கொடுத்து அனுப்பியதாக சொல்லியுள்ளார். எதிரியின் நிரந்தர முகவரி திருநெல்வேலி திசையன் விளை என்ன சொல்லி உள்ளார் என்றால் ஆமாம். செட்டி பாளையத்திற்கு முன்பு கோவை கீரநத்தம் பகுதியில் குடியிருந்து வந்ததாக சொல்லி உள்ளார் என்றால் ஆமாம். அந்த பகுதியில் குடியிருக்கும் நபர் உங்கள் காவல் நிலையத்தின் அருகே உள்ள அரசு மருத்துவமனையில் இரண்டு நாள் உயர் சிகிச்சையில் இருந்தார் என்பது தவறான தகவல் என்றாலும் சரியல்ல அவர் பழம் குற்றவாளி பல்வேறு பகுதிகளில் சுற்றிக்கொண்டு இருப்பார்.

12. நீங்கள் சட்டத்திற்கு புறம்பாக காவல் எடுத்து அவரை துன்புறுத்தியதன் விளைவாக அவர் அவரது உயிருக்கு ஆபத்தான நிலையில் நீங்கள் தான் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தீர்கள் என்றாலும் மருத்துவரின் உயர் சிகிச்சையால் தான் அவர் இன்று உயிர் பிழைத்துள்ளார் என்றால் சரியல்ல. சட்டத்திற்கு புறமாக எதிரியை கைது செய்து இவ்வழக்கில் சேர்த்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. எதிரி எந்த ஒரு ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும் எதிரியிடமிருந்து எந்த பொருளும் நீங்கள் கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல. இந்த வழக்கு சம்பவங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களால் செய்யக்கூடிய வகையில் அனுமானிக்கும்படி உள்ளது என்றால் சரியல்ல.எதிரி அது போன்ற வாகனம் ஓட்டி வரவில்லை என்றாலும்காவல்நிலையத்தில் இருந்த வாகனத்தை இந்த வழக்கில் காட்டியுள்ளளிர்கள் எனறால் சரியல்ல. எதிரி மற்றும் சாட்சிகளை கோயம்புத்தூர் அழைத்து சென்றதாக சொல்லியுள்ள நிலையில் எந்த எந்த வாகனம் யார் யாரை அழைத்து சென்றிர்கள் என்றும் வாகனத்தின் விவரம் பற்றி ஆவணத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான் . அதுபோன்ற எந்த இடத்திற்கு செல்லவில்லை என்றாலும் அதனால் தான் சொல்லவில்லை என்றாலும் சரியல்ல.

13. ஒப்புதல் வாக்குமூலத்தில் சம்பவ இடத்திலிருந்து எதிரி வீட்டிற்கு சென்றதாக சொல்லியுள்ள நிலையில், போக ஒரு மணி நேரம் மற்றும் வர ஒரு மணி நேரம் ஆகும் என்ற நிலையில் ,

கோயம்புத்தூர் செட்டிபாளையம் சென்று அங்கு எட்டு வழக்கிற்கு கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து பொருட்களை கைப்பற்றி வந்திருக்க இயலாது என்றால் சரியல்ல. கைப்பற்றுதல் மகசர் உங்களது கையிருப்பு சாட்சி என்றால் சரியல்ல. கார்த்தி என்பவர் புகார்தாரர் குடியிருக்கும் லைனில் குடியிருக்கும் நபர் என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம், கைப்பற்றுதல் மகசர் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல எதிரியிடம் உயிர் பயம் காண்பித்து சில ஆவணங்களில் கையொப்பம் பெற்றுள்ளீர்கள் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கத்திற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.